**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

**தரம் 10** **நேரம்:- 1 மணித்தியாலம்**

**சுட்டெண் :-…………………… பகுதி 1 புள்ளி :- ………**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

- பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

காருண்யன் என்பவர் தற்போதைய தொற்றா நோய்களின் தாக்கத்திற்கு உள்ளாகும் அதிகரித்த நோயாளிகளின் உணவுத் தேவையை கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் அரிசி மா, குரக்கன் மா என்பவற்றை பயன்படுத்தி உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை, உணவுத் தொழில்நுட்பம் தொடர்பாக டிப்ளோமா பட்டம் பெற்ற கர்ணனின் உதவியுடன் 'கற்பகதரு இயற்கை உணவகம்' என்ற பெயரில் ஆரம்பித்தார்.

01) மேற்படி இயற்கை உணவு வணிகத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவை, விருப்பம் முறையே,
(1) அரிசிமா இடியப்பம், உணவு (3) உணவு, குரக்கன்மா ரொட்டி
(2) அரிசிமா இடியப்பம், குரக்கன்மா ரொட்டி (4) உணவு, தொழில்நுட்ப அறிவு

02) பின்வருவனவற்றுள் மூலதனம் என்ற உற்பத்திக் காரணியாகக் கருதப்படக் கூடியது?
(1) காருண்யனின் முயற்சி
(2) கர்ணனின் இயற்கை உணவு தயாரிக்கும் அறிவு
(3) இயற்கை உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தானியங்கள்
(4) இயற்கை உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள்

03) கற்பகதரு இயற்கை உணவு வணிகத்தின் வாடிக்கையாளராகக் கருதப்படக் கூடியவர்?
(1) காருண்யன் (3) கர்ணன்
(2) நீரிழிவு நோயாளி (4) இயற்கை உணவு தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை வழங்குபவர்

04) மேற்படி வணிகத்தின் உரிமையாளர் கருத்தில் கொள்ள வேண்டிய சட்டச் சூழலாக குறிப்பிடக் கூடியது,
(1) நுகர்வோர் விவகார/பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை
(2) வரவு செலவுத்திட்டக் கொள்கைகள்
(3) பணவீக்கம்
(4) நவீன தொழில்நுட்பம்

05) கற்பகதரு இயற்கை உணவகம் தொடர்பான சட்டத்தேவைப்பாடாகக் கருதப்படுவது,
(1) பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
(2) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபார பெயர்பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.
(3) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.
(4) 1954 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

06) விருப்பம் ஒன்றின் பண்பாகக் கருதப்படக் கூடியது,
(1) தோற்றுவிக்கக் கூடியது (3) அத்தியாவசியமானது
(2) வரையறுக்கப்பட்டது (4) அனைவருக்கும் பொதுவானவை

07) வணிகமொன்றில் வணிகத்திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தல், சரியான தீர்மானமெடுத்தலை மேற்கொள்ளும் அக்கறை கொள்ளும் தரப்பினர் ………………………. ஆவார்.
(1) உரிமையாளர் (3) ஊழியர்
(2) முகாமையாளர் (4) வழங்குநர்

08) வணிகச் சூழலில் அகச் சூழலாக கருதப்படக் கூடியது,
(1) வழங்குநர் (3) வாடிக்கையாளர்கள்
(2) போட்டியாளர்கள் (4) முகாமையாளர்கள்

09) வட்டிவீதம், பணவீக்கம், நிறைதொழில்மட்டம், சேமிப்புக்கள் என்பவை உள்ளடங்கும் சூழல்
(1) அரசியல் சூழல் (3) தொழில்நுட்பச் சூழல்
(2) பொருளாதாரச் சூழல் (4) பூகோளமயச் சூழல்



kalvi.lk

10) வணிகமொன்றின் அகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்துகொள்ளக் கூடியது,
(1) பலம், பலவீனம்
(2) வாய்ப்பு, அச்சுறுத்தல்
(3) பலம், வாய்ப்பு
(4) பலவீனம், அச்சுறுத்தல்

11) பின்வருவனவற்றுள் ஒரு வணிகத்தின் வாய்ப்பினை மட்டும் காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) போட்டியாளர் உள்வருகை
(2) பணியாட்கள் விசேடமான திறன்கள், அர்ப்பணிப்புடன் காணப்படல்
(3) வணிகத்திற்கு அரசாங்கத்தின் வரிச் சலுகைகள் கிடைத்தல்
(4) புதிய உற்பத்தி முறைகளை வணிகம் அறிமுகம் செய்தல்

12) இலாப நோக்குள்ள பொதுத்துறை வணிகமாகக் கருதப்படக் கூடியது,
(1) அரச கம்பனி
(2) கூட்டுறவு
(3) பங்குடைமை
(4) சங்கவகை நிறுவனங்கள்

13) பின்வருவன பல்வேறு வகையான வணிகங்களின் சில குணவியல்புகள் ஆகும்.
A. இலாப நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்
B. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது
C. நட்டப்பொறுப்பு பரவாலாக்கப்பட்டிருத்தல்
D. சட்டஆளுமை காணப்படல்
E. சுதந்திரமான தீர்மானமெடுத்தல்

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்குரிய குணவியல்புகளைக் கொண்ட விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A, E (2) C, E (3) B, E (4) B. D

14) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தில் காணப்படும் பங்குடைமை சம்பந்தமான ஒரு விடயமாகக் கருதப்படக் கூடியது.
(1) பங்குடைமைக்கான பதிவு
(2) பங்காளர் உச்ச எண்ணிக்கை
(3) பங்குடைமை கலைப்பு
(4) பங்காளர் மூலதனம்

15) அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் விசேட பண்பாகக் கருதப்பட முடியாதது,
(1) தனிமனித அந்தஸ்து இல்லாதிருத்தல்
(2) உரிமை, நிருவாகம் அரசிற்குரியது
(3) தொடர்ந்தியங்கும் தன்மையிருத்தல்
(4) விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுவது

16) ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்படும் தனியார்துறை வணிக அமைப்பு எது?
(1) அங்கீகார வணிகம்
(2) தனியுடைமை வணிகம்
(3) கூட்டுறவுச் சங்கங்கள்
(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

17) வணிகமொன்றின் கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வென்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் ...................... ஆகும்.
(1) பொறுப்புக்கள்
(2) சொத்துக்கள்
(3) உரிமை
(4) செலவுகள்

18) உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் காரணமாக உரிமையில் நிகழும் அதிகரிப்புத் தவிர்ந்த உரிமையில் நிகழும் ஏனைய அதிகரிப்புக்களைக் குறிப்பது,
(1) பற்று
(2) வருமானங்கள்
(3) செலவினங்கள்
(4) சொத்துக்கள்

19) அஸ்வினி தன்னிடமுள்ள ரூ 300000 பணத்தையும், வங்கிக்கடனாக எடுத்த ரூ 200000 பணத்தையும் முதலீடு செய்து விசேட வைபவங்களுக்குத் தேவையான அலங்கார வளைவுகளைத் தயாரித்து வாடகைக்கு கொடுக்கும் வணிகமொன்றை ஆரம்பித்தார். மேற்படி கொடுக்கல் வாங்கல்களுக்கான சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது,

| | சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | 500000 | | 200000 | | 300000 |
| (2) | 500000 | | 300000 | | 200000 |
| (3) | 300000 | | 300000 | | - |
| (4) | 200000 | | - | | 200000 |


kalvi.lk

20) வணிகமொன்றிற்கு தரகு வருமானம் ஒன்று கிடைக்கப்பெறின் அது கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவது,
(1) சொத்துக்களிலும், பொறுப்புக்களிலும் ஆகும்.
(2) சொத்துக்களிலும், செலவுகளிலும் ஆகும்.
(3) செலவுகளிலும், பொறுப்புக்களிலும் ஆகும்.
(4) சொத்துக்களிலும், உரிமையிலும் ஆகும்.

21) தினேஷ் வணிகத்தின் 2017 ஆம் வருடத்திற்கான தகவல்கள் சில வருமாறு:-

| | |
|---|---|
| மூலதனம் (2017.01.01 இல்) | ரூ 350000 |
| நிதியாண்டுச் செலவுகள் | ரூ 120000 |
| நிதியாண்டு வருமானங்கள் | ரூ 100000 |

யூன் 30 ஆம் திகதி உரிமையாளரினால் இடப்பட்ட மூலதனம் ரூ 50000 ஆகும். 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உரிமையாளரின் உரிமையாகக் காணப்படும் தொகை,
(1) ரூ 450 000 (2) ரூ 500 000 (3) ரூ 380 000 (4) ரூ 350000

22) வரவு மீதியைக் காட்டும் கணக்குகள்,
(1) சொத்துக் கணக்குகள், செலவினக் கணக்குகள்
(2) பொறுப்புக் கணக்குகள், உரிமைக் கணக்குகள்
(3) வருமானக் கணக்குகள், பொறுப்புக் கணக்குகள்
(4) பொறுப்புக் கணக்குகள், சொத்துக் கணக்குகள்

23) வணிகத்தின் மாதாந்த வாடகை ரூ 10000 செலுத்தப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப்பதிவாக அமைவது,
(1) காசுக் கணக்கு வரவு ரூ 100000
வாடகைக் கணக்கு செலவு ரூ 10000
(2) வாடகைக் கணக்கு வரவு ரூ 10000
காசுக் கணக்கு செலவு ரூ 10000
(3) வங்கிக் கணக்கு வரவு ரூ 10000
வாடகைக் கணக்கு செலவு ரூ 10000
(4) வாடகைக் கணக்கு வரவு ரூ 10000
வங்கிக் கணக்கு செலவு ரூ 10000

24) கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகளில் பொதுவாகக் காணப்பட முடியாத கணக்கு மீதியைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்க.
(1) கடன்பட்டோர் கணக்கு செலவு மீதியாக அமைதல்
(2) பெற்றகழிவுக் கணக்கு செலவு மீதியாக இருத்தல்
(3) வங்கிக் கடன் கணக்கு செலவு மீதியாக அமைதல்
(4) முதலீட்டுக் கணக்கு வரவு மீதியாக அமைதல்

25) மூலப்பதிவேட்டையும் அதில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல ஆவணத்தையும் சரியாகக் காட்டும் விடையாக அமைவது,
(1) காசேடு – பட்டியல்
(2) கொள்வனவு நாட்குறிப்பு – பட்டியல்
(3) விற்பனை நாட்குறிப்பு – கைச்சாத்து
(4) பொது நாட்குறிப்பேடு – பற்றுச்சீட்டு

26) அபிஷேக் வணிகமொன்றை ஆரம்பித்து ரூ 300000 மூலதனமாக இட்டார். இக்கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் முதன்மையேடு,
(1) கொள்வனவு நாட்குறிப்பு
(2) பேரேடு
(3) காசேடு
(4) பொது நாட்குறிப்பேடு

27) வணிகமொன்றின் காசுமீதி ரூ 155 000 ஆக இருந்தது. பின் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன. அக்கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்ததன் பின் காசு மீதி எவ்வளவு?
- ரூ 10 000 சம்பளம் கொடுக்கப்பட்டது.
- பொருள் பற்று ரூ 5 000
- அருணிடம் பொருள் கொள்வனவு ரூ 10 000
- வாடகை வருமானம் பெறப்பட்டது ரூ 25 000

(1) ரூ 140 000 (2) ரூ 165 000 (3) ரூ 155 000 (4) ரூ 170000

28) கடன்கொடுத்தோருக்கு கடன்கால எல்லைக்கு முன் பணத்தை செலுத்தும் போது அவரால் வழங்கப்படும் கழிவு,
(1) கணியக் கழிவு
(2) வியாபாரக் கழிவு
(3) பெற்ற கழிவு
(4) கொடுத்த கழிவு

29) காயா வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத்தொகை ரூ 2000 ஆகும். கிடைக்கப்பெற்ற முற்பணக் காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக் காசுச் செலவுக் கொடுப்பனவுகள் ரூ 1750 ஆகும். இதன்படி அடுத்த மாதத்திற்கான சில்லறைக் காசு கட்டுநிதி மீள நிரப்பப்படும் தொகை,
(1) ரூ 1750 (2) ரூ 2000 (3) ரூ 2250 (4) ரூ 250


kalvi.lk

30) வணிகமொன்றின் வங்கிக் கணக்கின் செலவு மீதியானது,

(1) சொத்தொன்றாகும் (3) வருமானமொன்றாகும்

(2) பொறுப்பொன்றாகும் (4) செலவொன்றாகும்

31) 31.05.2018 இல் இருந்தவாறு வணிகமொன்றின் வங்கிக் கணக்கின் வரவு மீதி ரூ 14 800 ஆக இருந்த போதும், வங்கிக் கூற்று மீதி ரூ 14 000 ஆகக் காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்கான கொடுக்கல் வாங்கலாக அமைவது,

(1) வழங்கப்பட்ட போதும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 800 ஆகும்.

(2) வங்கியால் பெறப்பட்ட நேரடி வைப்புக்கள் ரூ 800 ஆகும்.

(3) வங்கியால் நேரடியாக பெறப்பட்ட பங்கு இலாபம் ரூ 800 ஆகும்.

(4) நிலையியல் கட்டளைக்கிணங்க வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ 800 ஆகும்.

32) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இடம்பெறாதது,

(1) நேரடிவைப்பு (3) வசூலிக்கப்படாத காசோலைகள்

(2) மாற்றப்படாத காசோலைகள் (4) தேறாத காசோலைகள்

33) கொள்வனவு நாட்குறிப்பில் பதிவு செய்யப்படுவது,

(1) அனைத்து காசுக்கொள்வனவுகளும்

(2) அனைத்து கடன் கொள்வனவுகளும்

(3) கடனுக்கு கொள்வனவு செய்யப்படும் மீள் விற்பனைப் பொருட்கள்

(4) நடைமுறையல்லாச் சொத்துக்கள் கடனுக்கு கொள்வனவு

34) பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட முடியாத கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.

(1) வணிகத்தின் பயன்பாட்டிற்கென இயந்திரமொன்றை கடனுக்கு கொள்வனவு செய்தல்

(2) மீள்விற்பனைக்கான பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்

(3) வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் கடனுக்கு காணி ஒன்றை கொள்வனவு செய்தல்

(4) உரிமையாளர் தனது சொந்த தேவைக்கென பண்டங்களைப் பற்றுதல்

35) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலம் அல்லாதது,

(1) காலத்தையும், உழைப்பையும் சேமிக்க முடிதல்

(2) கணக்கறிக்கைகள் சரியான தன்மை கொண்டு காணப்படுதல்

(3) இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை இலகுவாகப் பெற முடிதல்

(4) கணக்கீட்டு முறைகளை மாற்றம் செய்வது இலகுவாகக் காணப்படல்

36) வணிகமொன்றின் குறித்த கால இறுதியில் பேரேட்டுக் கணக்குகளின் வரவு மீதிகளையும், செலவு மீதிகளையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்படும் பட்டியலைக் குறிப்பது,

(1) பரீட்சை மீதி (3) இலாப நட்டக் கூற்று

(2) நிதிநிலைமைக் கூற்று (4) வருமானக் கூற்று

37) காசேட்டின் இரட்டைத் தொழிற்பாடுகளுள் ஒன்று முதன்மையேட்டுத் தொழிற்பாடாகும். மற்றைய தொழிற்பாடு

(1) முதன்மையேடாகும் (3) பேரேடாகும்

(2) நாளேடாகும் (4) பொதுக் குறிப்பேடாகும்

38) கீழே கணக்கீட்டு ஒழுங்கு முறைகள் சில தரப்படுகின்றன.

A. மூல ஆவணங்களைத் தயாரித்தல்

B. பேரேடுகளைத் தயாரித்தல்

C. கொடுக்கல் வாங்கல் இடம்பெறல்

D. முதன்மையேடுகளைத் தயாரித்தல்

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சரியான கணக்கீட்டு ஒழுங்குமுறையைக் குறிப்பது,

(1) C, A, D, B (2) A, B, C, D (3) B, A, D, C (4) D, C, A, B

39) தொங்கல் கணக்கு என்பது,

(1) ஒரு சொத்துக் கணக்கு (2) ஒரு செலவுக் கணக்கு

(2) ஒரு பொறுப்புக் கணக்கு (4) ஒரு தற்காலிகமான கணக்கு

40) பற்றுக் கணக்கை சமப்படுத்தும் போது அதன் கூட்டுத்தொகை ரூ 32000 இற்குப் பதிலாக ரூ 23000 என பதிவு செய்யப்பட்டதை திருத்துவதற்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது,

(1) பற்றுக் கணக்கு வரவு ரூ 18 000
தொங்கல் கணக்கு செலவு ரூ 18000

(2) தொங்கல் கணக்கு வரவு ரூ 9000
பற்றுக் கணக்கு செலவு ரூ 9000

(3) பற்றுக் கணக்கு வரவு ரூ 9000
தொங்கல் கணக்கு செலவு ரூ 9000

(4) பற்றுக் கணக்கு வரவு ரூ 9000
காசுக் கணக்கு செலவு ரூ 9000

(1×40=40 புள்ளிகள்)

******************



kalvi.lk

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

**தரம் 10** **நேரம்:- 2 மணித்தியாலம்**

**சுட்டெண் :-.......................... பகுதி 11 புள்ளி :- .........**

- ❖ முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**வினா இல 01**

**பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சந்தியா என்பவர் கேக் ஐசிங் (Cake icing) தொடர்பாக டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்த பின்னர் பிறந்தநாள், திருமண வைபவங்களுக்குத் தேவையான அலங்கார கேக் வகைகளை தயாரித்து வாடிக்கையாளரின் கட்டளைக்கிணங்க விற்பனை செய்யும் வணிகமொன்றை 'ரோஜா கேக் ஐசிங் சென்ரர்' (Roja cake icing centre) என்ற பெயரில் 01.01.2018 அன்று ஆரம்பித்தார். சந்தியா இயல்பாகவே வித்தியாசமான முறையில் வடிவமைக்கும் திறனைக் கொண்டிருந்தமையினால் அவரின் கேக் வடிவமைப்பிற்கு (Design) கூடுதலான கேள்வி காணப்பட்டது. இவர் சிறந்த கேக் வடிவமைப்புக்களை இணையத்தின் மூலம் பெற்றதுடன் தனது கட்டளைகளை தொலைபேசி மூலம் பெற்று தூர இடங்களுக்கு கொரியர் ( Courier) சேவையின் உதவியுடன் விநயோகித்து வந்தார். சந்தியா தனது வணிகத்தை தற்போதைய வணிகச் சூழலின் புதிய போக்கிற்கு இணங்க நவீனப்படுத்த எண்ணியதுடன் அதற்கு தேவையான மேலதிகமான நிதியினை வங்கிக்கடன் ஒன்றின் மூலம் பெற முயற்சி செய்தார்.

ஜனவரி முதல் வாரத்தில் ரோஜா கேக் ஐசிங் சென்ரரில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 01.01.2018 | மூலதனமிட்டது | ரூ 100 000 |
| 03.01.2018 | மூலப்பொருள் கொள்வனவு காசு | ரூ 50 000 |
| | கடன் | ரூ 25 000 |
| 05.01.2018 | வருண் கம்பனியிடமிருந்து இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு | ரூ 40 000 |
| 07.01.2018 | உதவியாளர் சம்பளம் கொடுத்தது | ரூ 4 000 |
| 10.01.2018 | மின்சாரக் கட்டணம் செலுத்தியது | ரூ 3 000 |
| 13.01.2018 | வங்கிக்கடன் பெற்றது | ரூ 30 000 |
| 14.01.2018 | விற்பனை வருமானம் | ரூ 120 000 |

(1) (அ) சந்தியாவின் வணிகத்தில் காணப்படும் பலமான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(ஆ) குறித்த வணிகத்தின் வாடிக்கையாளராகக் கருதப்படுபவர் யார்?

(2) சந்தியாவினால் நடாத்தப்படும் வணிக அமைப்பின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(3) (அ) மேற்படி வணிக அமைப்பினால்' நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
(ஆ) மேற்படி விடய ஆய்வின்படி வங்கிக்கடன் ஒன்றை பெற வேண்டுமெனின் குறித்த வணிகம் எவ் ஆவணத்தை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென நீர் கருதுகின்றீர்.

(4) (அ) வணிகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக ராதா என்பவரை இணைத்துக் கொள்ள சந்தியா விரும்புகின்றாரெனின் இவர் எத்தகைய வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும்?
(ஆ) மேற்படி வணிக அமைப்பின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(5) 01.01.2018 இல் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கலை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டுக.
சொத்து = உரிமை + பொறுப்பு

(6) (அ) மேற்படி வணிகத்தில் காணப்படும் நடைமுறைஅல்லாச் சொத்து ஒன்றினைக் குறிப்பிடுக.
(ஆ) நடைமுறை அல்லாப் பொறுப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

(7) 05.01.2018 இல் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கலுக்கான முதன்மையேட்டையும், அதற்கான இரட்டைப்பதிவினையும் தருக.

(8) வங்கிக்கடன் பெற்றமைக்கான இரட்டைப்பதிவினைத் தருக.

(9) சந்தியா வணிகத்தின் முதல் இரு வாரங்களுக்கான மொத்தக் கொள்வனவின் பெறுமதி யாது?

(10) மேற்படி வணிகத்தின் முதல் இரு வாரங்களுக்கான காசுக்கணக்கினைத் தயாரித்து, காசு மீதியினைக் கணிப்பிடுக. (2×10= 20 புள்ளிகள்)

## பகுதி 11

## (வணிகக்கல்வி)

## இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**வினா இல 02**

1. (அ) வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கேற்ப வணிகங்களை வகைப்படுத்திக் காட்டுக.
   (ஆ) மேலே (அ) வில் காட்டப்பட்ட வகைப்படுத்தலுக்கேற்ப அவற்றிற்கு இவ்விரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
2. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? எனக் குறிப்பிடுக.
   i. தேவைகளின் பண்புகளாக பொதுத்தன்மை கொண்டவை, தோற்றுவிக்க முடியாமை, வரையறுக்கப்பட்டவை என்பவற்றைக் குறிப்பிட முடியும்.
   ii. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவையும், உற்பத்தியின்போது துணையாகக் கொள்ளப்படுபவையும் உழைப்பு எனக் கூற முடியும்.
   iii. யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு சமமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர் வழங்குநர் எனப்படுவர்.
   iv. மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டத்தின் படி பங்குடைமை வணிகத்தின் ஆரம்ப மூலதனம் ரூ 1000 அல்லது அதற்கு மேற்பட்டு காணப்படின் பங்குடைமை ஒப்பந்தம் எழுத்து மூலம் உருவாக்கப்படல் வேண்டும்.

   (02 புள்ளிகள்)
3. காயத்திரி தளபாட உற்பத்தி நிலையம் வீட்டு மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான தளபாடங்களை உற்பத்தி செய்யும் வணிக அமைப்பாகும். மேற்படி அமைப்பின் உற்பத்திச் செயற்பாட்டிற்கு வளங்களாக பயன்படுத்தும் உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
4. ரமேஷ்கண்ணா என்பவர் தனது வணிகத்தை 'ரமேஷ் ஸ்ரோர்ஸ்' என்னும் பெயரில் நடாத்திச் செல்கின்றார்.
   (அ) மேற்படி வணிகத்தை எவ்வகையான வணிக அமைப்பினுள் உள்ளடக்க முடியும்?
   (ஆ) மேற்படி வணிகத்தை சட்டரீதியான தனிமனித அந்தஸ்து உள்ள அமைப்பாகக் கருத முடியுமா? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 03**

1. புறச்சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.
   1) அரசினது நிலைப்புத்தன்மை
   2) வருமானப் பரம்பல்
   3) Nano தொழில்நுட்பம்
   4) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்
   5) Digital தொழில்நுட்பம்
   6) வரவு செலவுத் திட்டக் கொள்கைகள்
   7) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
   8) சேமிப்புக்கள்

   மேற்படி விடயங்களை கீழ்க் குறிப்பிடப்படும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.
   (1) பொருளாதாரச் சூழல்
   (2) அரசியல் சூழல்
   (3) சட்டச் சூழல்
   (4) தொழில்நுட்பச் சூழல்

   (02 புள்ளிகள்)
2. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? எனக் குறிப்பிடுக.
   i. உள்நாட்டு வணிகங்களின் நீடித்த நிலைப்புத் தன்மையற்ற நிலை உருவாகுதல், உள்நாட்டு கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படல் என்பன வணிகமொன்றின் பொருளாதாரச் சூழலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
   ii. நாடொன்றின் தேசிய வருமானம் அந்நாட்டு மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட முறையைக் குறிப்பது வருமானப்பரம்பல் ஆகும்.
   iii. வணிகமொன்றின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வாய்ப்பு, அச்சுறுத்தல்களை அறிந்து கொள்ள முடியும்.



kalvi.lk

iv. இலாப நோக்குள்ள தனியார்துறை அமைப்புகளுக்குள் கூட்டுறவு அமைப்புக்கள், சங்க வகையான நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.

(02 புள்ளிகள்)

3. விவசாய பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்று விவசாய டிப்ளோமா பட்டம் பெற்ற சரவணன் என்பவர் பழப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு அவற்றை விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார்.
   (அ) சரவணன் வணிகத்தின் நோக்கங்கள் இரண்டு தருக.
   (ஆ) இவ்வணிகத்தில் அக்கறை கொள்ளக் கூடிய நான்கு தரப்பினர்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

4. பிரதான நகரின் பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் சந்திரன் என்பவர் மோர் மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட பானவகைகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்துகின்றார். அன்றாடம் பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் இவ்வணிகத்திற்கு வருகை தருகின்றனர்.
   (அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.
   (ஆ) எதிர்காலத்தில் இவ்வணிகத்திற்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

1. (அ) வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ஆ) இலாப நோக்கற்ற தனியார் துறை அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
2. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? எனக் குறிப்பிடுக.
   i. மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்கின்ற பல்வேறுபட்ட முறைகள் விருப்பங்கள் எனப்படும்.
   ii. வணிக இடர்களைப் பொறுப்பேற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தி வணிக நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்பவர் முகாமையாளர் ஆவார்.
   iii. இலாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டு பொதுவில் வணிகமொன்றை நடாத்தும் நபர்களுக்கு இடையிலான உறவுமுறை தனியுரிமை வணிகமாகக் கருதப்படும்.
   iv. அரச நிதிப்பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள் பல்வேறு சுற்றுநிருபங்களுக்கேற்ப தமது வணிகக் கருமங்களை நடாத்தும் அரசதுறை வணிகம் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகும். (02 புள்ளிகள்)
3. வணிக நிறுவனங்களின் பெயர்கள் சில கீழே தரப்படுகின்றன.
   A. வரையறுக்கப்பட்ட முகமட் கம்பனி
   B. செல்வா ஸ்ரோர்ஸ்
   C. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
   D. இலங்கை புகையிரதத் திணைக்களம்
   (அ) மேற்படி வணிக நிறுவனங்களில் சட்டரீதியான தனிமனித அந்தஸ்துடன் கூடிய வணிக அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
   (ஆ) மேற்படி வணிக நிறுவனங்களில் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாத வணிக அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
4. (அ) கூட்டுறவு அமைப்புக்களின் பண்புகள் இரண்டு தருக.
   (ஆ) வணிகமொன்றை பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி 11
## (கணக்கீடு)
## (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

**வினா இல 05**

1. (அ) 'வணிகக் கொடுக்கல் வாங்கல்' என்பதனால் கருதப்படுவது யாது?
   (ஆ) கொடுக்கல் வாங்கலின் பெறுபேறாக உருவாகும் கணக்கீட்டுக் கூறுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

2. வணிகமொன்றில் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் பேணப்படுகின்னறன.

| | |
|---|---|
| 1) கடன்பட்டோர் கணக்கு | 5) பற்றுக் கணக்கு |
| 2) காப்புறுதிக் கட்டணக் கணக்கு | 6) கடன்கொடுத்தோர் கணக்கு |
| 3) வங்கிக் கடன் கணக்கு | 7) சம்பளக் கணக்கு |
| 4) இயந்திரக் கணக்கு | 8) மூலதனக் கணக்கு |



kalvi.lk

மேலே தரப்பட்ட கணக்குகளை கீழே தரப்பட்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

i. சொத்துக் கணக்குகள்
ii. பொறுப்புக் கணக்குகள்
iii. செலவினக் கணக்குகள்
iv. உரிமைக் கணக்குகள் (02 புள்ளிகள்)

3. இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்குகளின் பெறுமானங்களில் அதிகரித்தல் அல்லது குறைதல் வரவுப் பக்கத்திலா செலவுப் பக்கத்திலா பதிவு செய்யப்படும் என்பதைக் குறிப்பிடுக.

| **கணக்கின் பெயர்** | **அதிகரித்தல்** | **குறைதல்** |
|---|---|---|
| கட்டிடக் கணக்கு | | |
| மின்சாரக் கணக்கு | | |
| பெற்ற வாடகை | | |
| கடன்கொடுத்தோர் கணக்கு | | |

(04 புள்ளிகள்)

4. நிசாத் என்பவர் 01.01.2018 இல் சில்லறை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

i. நிசாத்தினால் மூலதனமிட்டது ரூ 100 000
ii. வங்கிக் கடன் பெற்றது ரூ 50 000
iii. நிசாரிடமிருந்து பொருட்கள் கடனுக்கு கொள்வனவு ரூ 10 000
iv. வாடகை காசாக செலுத்தியது ரூ 5 000

❖ மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டு மாதிரியில் பதிந்து காட்டுக.

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |
| iii. | | | |
| iv. | | | |

(04 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

1. (அ) பற்றுச்சீட்டு என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) வணிகத்தினது காசுக் கிடைப்பனவிற்குரிய மூலங்கள் இரண்டு தருக.
(02 புள்ளிகள்)

2. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
(அ) குமணனுக்கு கடனுக்கு விற்பனை ரூ 10000
(ஆ) விமலா என்ற கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூ 20000 பெறுமதியான காசோலை ஒன்று மறுக்கப்பட்டுள்ளது என வங்கியால் அறிவிக்கப்படல் (02 புள்ளிகள்)

3. சரஸ்வதி வணிகத்தின் 2018 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற சில்லறைக்காசு கொடுப்பனவுகளுக்குரிய தகவல்கள் வருமாறு:-

**சில்லறைக் காசுக் கட்டுநிதி ரூ 2000 ஆகக் காணப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 01.04.2108 | இல் மீதி | ரூ 400 |
| 01.04.2018 | மீதி மீள் நிரப்பல் செய்யப்பட்டது | |
| 01.04.2018 | சுத்திகரிப்புச் செலவுகள் | ரூ 200 |
| 04.04.2018 | உபசரணைச்செலவுகள் | ரூ 150 |
| 07.04.2018 | ஆட்டோ செலவுகள் | ரூ 250 |
| 11.04.2018 | ரவிக்குக் கொடுத்தது | ரூ 300 |
| 13.04.2018 | தபால்கட்டணம் | ரூ 100 |
| 16.04.2018 | இல் மீள் நிரப்பல் செய்யப்பட்டது | |


kalvi.lk

**வேண்டப்படுவது:-**

அஞ்சல் செலவு, நானாவிதச் செலவு, பிரயாணச்செலவு, உபசரணைச் செலவுகள், பேரேட்டுக் கணக்குகள் என்னும் பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சில்லறைக் காசேட்டினைத் தயாரிக்குக.

(04 புள்ளிகள்)

4. காகிதாதிப் பொருட்களை கொள்வனவு செய்து மீள் விற்பனை செய்யும் சித்ரா வணிகத்தின் கடன் கொள்வனவு தொடர்பான தகவல்கள் சில வருமாறு:-

2018.06.01 பட்டியல் இலக்கம் 230 இன் அடிப்படையில் விமலிடம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினது பட்டியலின் தேறிய பெறுமதி ரூ 24000 ஆகும்.

2018.06.10 பட்டியல் இலக்கம் 245 இன் அடிப்படையில் வருணிடம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினது பட்டியலின் தேறிய பெறுமதி ரூ 32000

2018.06.16 பட்டியல் இலக்கம் 50 இன் அடிப்படையில் வனிதா வணிகத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினது பட்டியலின் தேறிய பெறுமதி ரூ 14000

2018.06.25 பட்டியல் இலக்கம் 67 இன் அடிப்படையில் வனிதா வணிகத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினது பட்டியலின் தேறிய பெறுமதி ரூ 24000

**வேண்டப்படுவது:-**

(அ) 2018 யூன் மாதத்திற்கான கொள்வனவுக் நாட்குறிப்பு

(ஆ) தேவையான பேரேட்டுக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 07**

1. (அ) தொலைபேசி வங்கிச் சேவையினூடாக வணிகர் ஒருவர் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ஆ) வங்கி மேலதிகப்பற்று என்பதனால் கருதப்படுவது யாது?

(02 புள்ளிகள்)

3. கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்தில்கொண்டு தசரதன் வணிகத்தின் 2018.05.31 திகதியிலுள்ள பரீட்சைமீதியைத் தயாரிக்குக.

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் | ரூ 30 000 | விற்பனை | ரூ 35 000 |
| வங்கி மேலதிகப்பற்று | ரூ 5 000 | காப்புறுதிக் கட்டணம் | ரூ 5 000 |
| கொடுத்த கழிவு | ரூ 3 000 | இயந்திரம் | ரூ 40 000 |
| மூலதனம் | ரூ 50 000 | சம்பளம் | ரூ 12 000 |

(02 புள்ளிகள்)

2. சிவா வணிகத்தின் 2018 ஓகஸ்ட் மாதத்தின் வங்கிக் கணக்கில் அனுகூலமான மீதியாக ரூ 15000 ஆகக் காணப்பட்டது. வங்கிக் கூற்று வேறு மீதியைக் காட்டியது. வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு:-

1) வைப்பிலிடப்பட்ட பின்வரும் காசோலைகள் 2018.08.31 வரையில் தேறாதவைகளாக இருந்தன.

காசோலை இலக்கம் 56 ரூ 5 000

காசோலை இலக்கம் 89 ரூ 6 500

2) வழங்கப்பட்ட பின்வரும் காசோலைகள் 2018.08.31 வரையில் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

காசோலை இலக்கம் 650 ரூ 7 000

காசோலை இலக்கம் 985 ரூ 4 500

3) நிலையியல் கட்டளைக்கமைய வங்கியின் மூலம் செலுத்திய காப்புறுதி தவணைக் கட்டணம் ரூ 3 000 ஆகும்.

**வேண்டப்படுவது:-**

(அ) 31.08.2018 இல் உள்ளவாறான வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை சீராக்குதல் (சீராக்கிய காசேடு)

(ஆ) 31.08.2018 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கினைக்கக்கூற்றிதைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

4. 31.01.2018 இல் காயா வணிகத்தின் பரீட்சைமீதி சமப்படவில்லை. வித்தியாசமாக காணப்பட்ட ரூ 5000 தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1) மின்சாரக் கணக்கு மீதி ரூ 5000 பரீட்சைமீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

2) கடன்விற்பனை ரூ 11000 கணக்குகளில் இருமுறை பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

(அ) மேலுள்ள தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(ஆ) தொங்கல் கணக்கு (04 புள்ளிகள்) (மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page